# தமிழ்ச்சூழலில் பெண்ணிய அரங்கியல் முன்னெடுப்புகள்

முனைவர் ம. கருணாநிதி
தமிழ் - உதவிப்பேராசிரியர்
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் - 635601

**முன்னுரை**

சமூகப்படிநிலை வளர்ச்சியில் நிலவுடமைச் சமூக அமைப்பு முறையில் பெண் - ஆண் எனும் இரு பிரிவில் பிரிவினையும், அடிமைப்படுத்தும் குணமும் உருவாகியுள்ளன. நிலங்களைக் கையகப்படுத்தும் மனநிலையை ஒட்டியே பெண்ணையும் தன்வசம் உடைமையாக்கும் வேலையை ஆணாதிக்கச் சமூகம் செய்தது. நிலவுடமைச் சமூக அமைப்பு மனித வாழ்க்கை முறையை முற்றிலும் மாற்றியமைத்து, பெண்ணை குடும்பம் எனும் கட்டமைப்பிற்குள் கொண்டுவந்து ஆணின் வேலைப்பிரிவில் இருந்து பெண்ணின் வேலைப்பிரிவு வேறுபட்டதாக ஆக்கியதோடு. ஆணின் உலகம் பரந்ததாகவும், பெண்ணின் உலகம் குடும்ப நிர்வாகம், கணவனைக் கவனித்தல், குழந்தைகளைப் பராமரித்தல் எனும் தன்மைகளிலிலேயே அமைந்தன. முதலாளித்துவச் சமூக உருவாக்கத்தில் பெண்ணின் நிலைப்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டாலும் பெண்ணை இரண்டாம் தர குடிமக்களாகவே ஆக்கியுள்ளது.

பெண்களுக்கு நேரிடும் பிரச்சினைகள், பெண்கள் பற்றிய சித்திரிப்பு, பெண் – ஆண் எனும் இருபாலரது படைப்புகளிலும் வெளிப்படுகின்றன. புரிதல், உணர்தல் எனும் தன்மைகளில் இலக்கியங்களில் பெண்மையக் கருத்துருவாக்கம் மாற்றுவாதத்தை முன்வைக்கின்றது. இப்பின்னணியில், பெண்களைப் பற்றி ஆண்கள் இலக்கியம் படைப்பதும், பெண்களின் வெளியை பெண்களே படைப்பதும் நிகழ்கிறது. இதன் விளைவாய்ப் பெண் விடுதலைக்கான அச்சாரமாய் கலை இலக்கியங்கள் விளங்குகின்றன. இச்சூழலில் தான், பெண்களின் விடுதலை உணர்வுகளை மையப்படுத்திய பெண் நிலைவாதம் நாடகத்தளத்திலும் எழத் தொடங்கியது. சமூகத்தில் பெண்கள் வகிக்கும் நிலைமை குறித்த வெளிப்பாடுகளை விசாரணைக்குட்படுத்தும் வண்ணம் உருவாகும் நாடகப் படைப்பாக்கங்கள், நாடக நிகழ்த்துதலைக் கொண்ட நாடகச் செயல்பாடுகள் பெண்களை அரங்கச் செயல்பாட்டில் வெளிப்படுத்த முயலும் தன்மை கனிந்துள்ளது.

**பெண்ணிய அரங்கின் தோற்றப் பின்புலமும் சமூகப் பின்புலமும்**

பெண்ணிய அரங்கின் தோற்றுவாயைப் பார்க்கும் போது தொடக்கத்தில் அமெரிக்கக் கலாச்சாரப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் கொள்கிறது. இதன் பின் 1960 - 70களில் பிரிட்டனில் பெண்களுக்கான அரங்கு உருவாக்கப்பட்டது. மேற்கத்தியச் சூழலை ஒட்டியே இந்திய, தமிழ்ச் சூழலிலும் நவீன நாடகங்களின் செல்நெறியில் பெண்ணிய நாடகச் செயல்பாடும் உருவாகியுள்ளது.

பெண்ணிய அரங்கு உலகளவில் பரந்துள்ளது. பெண்களும் தமக்கான சம உரிமையைச் சமூகத்தில் நிலைநாட்ட முற்பட்ட சூழலில் படைப்பிலக்கியச் செயல்பாட்டிலும் பெண்கள் ஈடுபடுவதைப்போல் அரங்கச் செயல்பாட்டிலும் பெண்கள் ஈடுபட ஆரம்பித்தனர். உலகளவில் நாடகங்களில் பெண்களின் பாத்திரத்தை ஆண்களே ஏற்று நடிப்பதும், அரங்கச் செயல்பாட்டில் இரண்டாம் நிலையில் நடத்தப்படுவதையும், பெண்கள் உணர்ந்தார்கள். சம உரிமை, சமபங்களிப்பு, ஆணுக்கு நிகராக அரங்கத் தொழில் நுட்பத்தில் ஈடுபடுதல் எனும் நிலைகளில் பெண்கள் ஆண்களோடு சேர்ந்தும் தனித்தும் செயல்பட ஆரம்பித்தனர். படைப்பு நிலையிலும் நாடக நிகழ்த்துதல் முறைகளிலும் பெண்கள் சம உரிமை வேண்டுமென குரல் கொடுத்தனர். அறுபது எழுபதுகளுக்கு முன் நாடகப் படைப்பாக்கம் ஆண்களே செய்துவந்தார்கள். நாடகங்களின் முதன்மைப் பாத்திரமும் ஆண்களை மையப்படுத்தியே இயங்கியன. நாடக ஆக்கத்தில் பெண்களை விட ஆண்கள் அதிகமாகவே செயல்பட்டார்கள். பெண்களுடைய பாத்திரத்தை ஆண்களே ஏற்று நடிக்கும் சூழல் நிலவியது. இதனை மாற்றும் விதமாக பெண்கள், அரங்கச் செயல்பாடுகளில் செயல்பட ஆரம்பித்தனர். இச்சூழலில் தான் பெண்களுக்கான அரங்கு உருவாக்கப்பட்டது. இவ்வரங்கு பெண்ணியம் எனும் கோட்பாட்டுச் சிந்தனைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு, தெருக்கூத்து எனும் மரபான அரங்கின் கூறுகளை எடுத்துக் கொண்டும் மரபில் இருக்கும் ஆதிக்கக் கூறுகளைக் கேள்வி கேட்க ஆரம்பித்தது. மேற்கத்தியச் சூழலில் சிவப்பணி (1972) எனும் அமைப்பு பெண்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தியது. மான்ஸ்ட்ராஸ் ரெசிஸ்ட்மென்ட் (1975) எனும் அமைப்பும் சமூகம் மற்றும் கலை இலக்கியத்திற்குள் பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்தது.

- ஊடகங்களில் பெண்களுக்கான சம உரிமையைப் பேசுதல்.
- நாடகச் செயல்பாட்டாளர்களுக்குச் சமூக அரசியல் தேவையை வலியுறுத்துதல்.பெண்களின் அனுபவங்களைப் படைப்பாக வெளிக்கொணர்தல்.

- அனுபவங்களை எழுதுவதற்கு பெண்களுக்குப் படைப்பாக்கப் பயிற்சி அளித்தல்.
- நாடக அமைப்புகளில் பெண்களை நாடகச் செயல்பாட்டாளராகக் கொண்டு வருதல்.
- பெண்களுக்கு நடிப்புப் பயிற்சியும், நாடக இயக்கப் பயிற்சியும், நாடகத் தொழில் நுட்பப் பயிற்சியும் அளித்தல்.

எனும் தன்மைகளில் பெண்களின் பங்களிப்பினை அரங்கச் செயல்பாட்டில் கொண்டுவர மேற்கத்திய பெண்ணியச் செயல்பாட்டாளர்கள் முன்வந்தார்கள். மேகான்டெரி (1932), லரில் சர்ச்சில் (1932) ஆகிய இவ்விரு ஆளுமைகளும் பெண்களுக்குச் சம உரிமையைப் பெற போராடினார்கள். பல ஊடகங்களின் வாயிலாக அரசியல், பொருளாதார, சமூகப் பண்பாட்டுச் சூழலில் பெண்களின் இருப்பினை எடுத்தியம்பினார்கள். இச்செயல்பாடே பெண்ணிய அரங்கிற்கு வித்திட்டது. “எல்லா நாடுகளிலும் பெண்கள் அமைப்புகளின் எதிர்ப்புச் செயல்பாடுகளின் அம்சமாகவே பெண்சார் அரங்கங்கள் செயல்படுவது போலவே தான் இந்தியாவிலும் தொடங்கியது. 1980களில் அவ்விதம் தொடங்கிய நிகழ்வாக அனுராதா கபூரின் ‘ஓம் ஸ்வாஹா’ நாடகத்தையும் பம்பாய் ‘ஸ்தீரி முக்தி சங்கடனா’ குழுவின் ‘மல்ஹிஸாலிஹோ’ நாடகத்தையும் காணலாம். 1980களுக்கு முன்னரே ஸோரா சைகால் சாந்தாகாந்தி, தீனாபடாக், தீப்தி மித்ரா, விஜயா மேத்தா போன்றோர் அரங்கத் துறையில் தம் முத்திரையைப் பதித்துள்ளனர்” (அ.மங்கை, ‘மூன்று நாடகங்கள்’, ப.8.)

தமிழில் அ.மங்கை, பிரசன்னா ராமசாமி, ஜீவா, காந்திமேரி, ப்ரிதம் சக்கரவர்த்தி போன்றவர்களைத் தமிழில் அரங்கச் செயல்பாட்டாளராக அடையாளப்படுத்த முடிகின்றது. அ.மங்கையின் சுவடுகள், பச்சமண்ணு, பனித்தீ முதலிய நாடகங்கள் குறிப்பிடத்தக்கதாகும். காந்தி மேரியின் ‘நளாயினி எனும் தீ’, ‘மீண்டும் மீண்டும்’ எனும் நாடகங்கள் பெண்ணிய நாடகங்களாகும். இவர் ப்ரிதம் சக்கரவர்த்தியின் ‘துச்சலா’ நாடகம் பெண்ணியச் சிந்தனையை அடிப்படையாக வைத்துக் கொண்டு மகாபாரதக் கதையாடல்களின் மீது கேள்வி எழுப்புவதாக எழுப்புவதாக அமைந்த நாடகமாகும். தமிழில் பெண்ணிய நாடகச் செயல்பாடுகளை ஒட்டியே தலித் பெண்ணியம் எனும் சிந்தனை முறை தோன்றியது. தலித் பெண்ணியத்தை அடிப்படையாகக் கொண்டு உருவானதே தலித் பெண்ணிய நாடகமாகும். மு.ஜீவா தலித் பெண்ணிய நாடகச் செயல்பாட்டாளராகச் செயல்பட்டு வருகின்றார்.

பெண்ணிய அரங்கியலின் மையம் கீழ்க்காணும் தன்மைகளில் அமைகின்றன.

- தொன்மங்களின் மதிப்பீடுகளை மறுபரிசீலனை செய்தல்.

- பெண்ணிய நோக்கில் வரலாற்றினை அணுகி இலக்கிய வரலாற்றினுள் மறுவாசிப்பு செய்தல்.
- பெண்ணின் இருப்பை நிலைநாட்டல்.
- சமூக மாற்றத்திற்குப் பங்காற்றிய பெண்களின் வரலாற்றினை வெளிக் கொண்டு வருதல்.
- பழந்தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் பெண்ணின் படிமத்தை மீளுருவாக்கல்.

எனும் தன்மைகளில் பெண்ணிய அரங்கு அமைகின்றது. சமூகத்தில் பெண்களின் நிலை குறித்த வெளிப்பாடுகளை விமர்சிக்கும் தன்மையில் உருவாகும் நாடகப் படைப்பாக்கங்கள், நாடக நிகழ்த்துதலைக் கொண்ட நாடகச் செயல்பாடுகள் பெண்களின் வெளியை அரங்க வெளியில் வெளிப்படுத்த முயலுகின்றன. “பெண்ணியம் ஒரு கருத்தாக்கமாக உருவெடுத்துச் சமூகத்தில் பெண்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கான இயக்கங்களை வளர்த்தெடுப்பது வரலாற்றில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமாகும். உலகம் முழுவதிலும் உள்ள சமூக வரலாறுகளில் பெண்கள் பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் வாழ்க்கையின் பல தரப்புகளில் ஆணுக்கு அடிமையாக இருப்பதால் பெண்ணிய இயக்கங்களின் முதலாவதான முக்கிய போராட்டமாகச் ‘சம உரிமை பெறுவது’ என்பது இருந்தது.”(கு.பகவதி, ‘தமிழ்நாடகம் நேற்றும் இன்றும்’ப.126).

பெண்ணிய அரங்கியல் அணுகுமுறை, இதுவரைக்குமான கலை இலக்கியங்கள் அனைத்தையும் மறுவிசாரணைக்கு ஆட்படுத்துகின்றது. இந்த மறுவிசாரணை என்பது உண்மைக்கான தத்துவார்த்தத் தேடலாக மட்டுமல்லாமல், பெண்ணினத்தை ஒடுக்கும் சக்திகளை மாற்றுவதோடு, ஒடுக்கு முறைக்கான காரணங்களைக் கண்டுணர்ந்து அவைகளைக் களைவது என்கிற நிலையில் அமைகின்றது. “பெண்மையவாதம் என்பது ஆண் இன எதிர்ப்பாகக் காண்பது அன்று; ஆண் ஆதிக்க எதிர்ப்;பாகக் காண்பது. ஒடுக்குமுறைக்கு எதிரான இந்த எதிர்ப்பு; தன்னையொத்த அனைத்து ஒடுக்கப்பட்டப் பிரிவுகளையும் இனம் காண்பதும், தனது சுயத்தை இழக்காமல் அவற்றுடன் ஒன்றுபட முயல்வதும் ஆகும்.” (அன்வர் பொன்ராஜா, கட்டியம் இதழ்-1, ப.136.)

**நிறைவுரை**

தமிழிலும் நவீன நாடகம் பெண்ணிய அணுகுமுறையை மையப்படுத்தியே பெண்ணிய அரங்கு செயல்பட்டு வருகின்றது. ஆரம்ப காலகட்ட நாடகங்களில் நாடகப் பார்வையாளர் எனும் நிலையில் கூட பெண்கள் பங்கேற்பது குறைவு என்று சொல்லலாம். கிரேக்க சமஸ்கிருத நாடகங்களில் பெண்கள் நாடகம் பார்க்க அனுமதிப்படாத தன்மையையும் அறிய முடிகின்றது.

பெண்கள் ஊரின் மையப் பகுதியான பொது இடங்களுக்கு வர அனுமதியில்லை. நாடகங்களும் ஊரின் மையப்பகுதியில் நிகழ்ந்ததால் பெண்கள் அவ்விடத்திற்கு வரமுடியாத சூழல் இருந்தது. பிறகு பாரம்பரியக் கூத்தைப் பெண்களும் பார்க்கும் வழக்கம் உண்டானது. அரிஸ்ட்டாடிலின் நாடகக் கொள்கையிலும் கூட பெண்ணுக்கு முதன்மைப் பாத்திரத்திற்குரிய தகுதி இல்லை என்பதைச் சுட்டலாம். நாட்டுப்புற நாடகங்களிலும் பெண் பாத்திரத்தை ஆண்களே நடிப்பது மரபாக இருந்து வந்துள்ளதையும் காண முடிகிறது. பம்மல், சங்கரதாஸ் சுவாமிகள் நாடகங்களில் பெண் பாத்திரத்தை ஆண்கள் ஏற்கும் மரபினையும் அறியலாம். இவ்வாறு தமிழ்நாடு, இந்தியா மற்றும் உலகளாவிய நாடக மரபினைப் பார்க்கும்போது பெண்களின் பங்கேற்பு மிகக் குறைவேயாகும். பெண்ணியச்சிந்தனை தோற்றப்பின்னணியில் பெண்ணிய அரங்கியலைப் பார்க்கப்படவேண்டும். இச்சூழலை ஒட்டியே நவீன நாடக உருவாக்கப் பின்னணியில் தான் தமிழ்ச்சூழலில் பெண்ணிய அரங்கியல் முன்னெடுப்புகள் உருவாகி வருகின்றன.

**துணை நூல்கள்**

1. பகவதி கு., (ப.ஆ), 2000, தமிழ் நாடகம் நேற்றும் இன்றும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

2. மங்கை அ., 2003, மூன்று நாடகங்கள், அன்னம் வெளியீடு தஞ்சாவூர்.